முருகப்பெருமான் துணை

**மகான் அநுமான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.09.2022**, வெள்ளிக்கிழமை

1. ஞானபலம் அடைந்து வாழ
   ஞானிகளை வணங்கி வாழ
   தானதருமம் செய்து வாழ
   தவராஜனின் அனுகூலம் பெற்றுவாழ
2. வாழவே கலியுக மக்களை
   வணங்கி அரங்கன் குடிலை நோக்கி
   காலமதில் வந்து சேர பாதுகாப்பு
   கண்டு வாழ்வீர் எனக் கூறி
3. கூறியே சுபகிருது தரிவை திங்கள்
   குறைவிலா சஷ்டிதிகதி புகர்வாரம்
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் **06**ம் நாள், **23.09.2022** வெள்ளிக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   தேசிகனுக்கு அநுமான் யானும்
4. யானுரைக்க உலக வாழ்வினில்
   உயர்வான ஞானிகள் பலம்
   ஞானமெனும் வரமாக அடைய
   நன்னெறி குன்றா வாழ்வுமாகி
5. ஆகியே வாழுகின்ற காலமே
   அனுகூலம் மேலவர் வழிவழி
   மகிழவே சக்திகளாகக் கிட்டி
   மண்னை மக்களை காக்கின்றவண்ணம்
6. வண்ணமுடம் நல்ல தலைமையை
   வகையாகத் தேர்வு செய்யும்
   எண்ணம் உலகினில் நிரம்பி
   எங்கும் ஞானவான்கள் வெளிவருவர்
7. வருகவே ஞானத் தலைமையாக
   வடிவேலனை வணங்கும் ஏற்கும்
   தருமம் நிறைந்த தலைமையாக
   தரணியெங்கிலும் பெருகி
8. பெருகி இனிதே உலகமாற்றம்
   பிரபஞ்சம் ஏற்க வியக்க
   ஆறுமுக அரங்கன் அவதார
   அற்புதத்தால் நடக்கக் கூடும்
9. கூடவே கலியின் இன்னலை
   குவலயம் அனுபவித்து வந்தாலும்
   நாடெங்கிலும் இந்தவித மாற்றம்
   ஞானவழி மாற்றமாக நிகழஇருக்க

10. இருக்கவே சூட்சும பரியந்தம்
இணையிலா மகான் சன்மார்க்கமாக
கருத்தாக அரங்கன் தருமமாக
கலியினில் விரைந்து பரவிமாற்றம்

11. மாற்றம் அரங்கன் தருகின்ற
மகத்துவமிக்க அனுகூலத்தால் நடக்கும்
ஆற்றல்பட ஞான ஆட்சி ஆகும்
அறிவித்த அனுகூலஆசி முற்றே

–சுபம்–